# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
## HELD IN AUGUST - 2008

## GGY 3.21 – COASTAL GEOMORPHOLOGY & ENVIRONMENTAL PERSPECTIVE

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "அண்மைக்காலமாக அதிகரித்துவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளானவை இந்து சமுத்திரச் சூழலை மாசடையச் செய்கின்றது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

02. (அ) இலங்கையின் கரையோர வலயங்களை வரையறை செய்க.

(ஆ) இவ்வலயங்கள் மாசடைவதற்கு துணையாக அமைகின்ற மானிட நடவடிக்கைகள் பற்றி விளக்குக.

(இ) அவற்றிற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்வைக்குக.

03. (அ) சுனாமி பேரலையானது எவ்வாறு சாதாரண கடலலையில் இருந்து வேறுபடுகின்றது?

(ஆ) கடலலையின் செயற்பாடுகள் காரணமாக உருவாகும் தின்னல் நிலவுருவங்களை புனையா வரைபடங்களின் உதவியுடன் விபரிக்குக.

04. கடலில் காணப்படும் மாறுபட்ட காரணிகள் காரணமாக அமையப் பெறும் அலைகள், வற்றுப் பெருக்கு மற்றும் நீரோட்டங்கள் போன்றவற்றின் செயற்பாடுகளையும் அவற்றுக்கு இடையிலான விளைவுகளையும் விளக்குக.

05. இலங்கை அரசினால் இந்திய நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்ட பெற்றோலிய எண்ணெய் அகழ்வு ஒப்பந்தம் காரணமாக ஏற்படப் போகின்ற சாதக, பாதகங்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

06. (அ) இலங்கையின் தென்கிழக்கு கரையோரம் ஒரு பொருளாதார கேந்திரப் பிரதேசம் என்பதனை திரையிட்டுக் காட்டுக.

(ஆ) நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியினை பேணிப் பாதுகாப்பதற்கான திட்டங்களை முன்வைக்குக.

07. (அ) இந்திய அரசினால் மேற்கொள்ளப்படவுள்ள சேது சமுத்திரத் திட்டத்தினை சுருக்கமாக விளக்குக.

(ஆ) இத்திட்டத்தின் மூலமாக இலங்கை அடையப்போகும் நன்மை, தீமைகளை விமர்சன ரீதியாக முன்வைக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்புகள் தருக.

i. சர்வதேச கடற்கரையோரச் சட்டங்கள்

ii. இலங்கையில் பவளப் பாறைகள் அகழ்வு

iii. கடல் நீர் மாசடைவு

iv. சமுத்திர காலநிலை

***